

உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் கவிஞர் நன்மாறன் அவர்களை கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ், மாநில துணைச் செயலாளர் எம்,எஸ், ஹரி பாபு, சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் சண்முகநாதன் ஆகியோர் சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தறிந்தனர்.

### பயிர்க்கடன்: த.வெ.க. அரசின் அறிவிப்பு


# விவசாயிகளை மிகவும் சிறுமைப்படுத்துவதாகும்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே 28-

த.வெ.க. அரசின் பயிர்க்கடன் அறிவிப்பானது விவசாயிகளை மிகவும் சிறுமைப்படுத்துவதாகும் என்று ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 27.05.2026 தேதிய தீக்கதிர் நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:



தீக்கதிர்

சிறுமைப்படுத்த வேண்டாம்!

விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்திடும் தமிழக அரசின் அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியையும் நிதி நிலைமையையும் காரணம் காட்டி, பெயரளவில் ஒரு தள்ளுபடி திட்டத்தை மாநில அரசு திங்களன்று அறிவித்திருக்கிறது. இது ஏற்கெனவே பல்வேறு பாதிப்புகளுடன் கடன் சுமையில் இருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு உதவுவதாக இல்லை என்ற மனக்குறையே அவர்களிடத்தில் நிலவுகிறது.

5 ஏக்கர் என்பது 2 ஹெக்டேர் நிலம். இதற்கு

விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க்கடன்களை தள்ளுபடி செய்திடும் தமிழக அரசின் அறிவிப்பு விவசாயிகள் மத்தியில் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கியையும் நிதி நிலைமையையும் காரணம் காட்டி, பெயரளவில் ஒரு தள்ளுபடி திட்டத்தை மாநில அரசு திங்களன்று அறிவித்திருக்கிறது. இது ஏற்கெனவே பல்வேறு பாதிப்புகளுடன் கடன் சுமையில் இருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு உதவுவதாக இல்லை என்ற மனக்குறையே அவர்களிடத்தில் நிலவுகிறது.

5 ஏக்கர் என்பது 2 ஹெக்டேர் நிலம். இதற்கு கூட்டுறவு வங்கிகளில் டெல்டா மாவட்டங்களில் 2.5 ஏக்கருக்கு கடன் பெற்றால் ரூ.91.250 வரும். பிற மாவட்டங்களில் ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் அளவே கிடைக்கும். அதாவது 3 ஏக்கர் நிலமிருந்தால்தான் 1 லட்சம் ரூபாய் கடன் கிடைக்கும். இந்நிலையில் குறு விவசாயி ரூ.50 ஆயிரம் கடன் பெற்றிருந்தால் முற்றிலும் தள்ளு படி என்றும், அதற்கு மேல் பெற்றிருப்பவர்களுக்கு 10 ஆயிரத்துக்கு ஒரு விகிதம் என்றும், ஒரு லட்சத்துக்கு மேல் பெற்றிருந்தால் வெறும் 5 ஆயிரம் தள்ளுபடி என்றும் அறிவித்திருப்பது ஏமாற்றம் அளிப்பதாகும்.

இதிலும் சிறு விவசாயிகளுக்கு அந்த விகி தத்திலும் பாதியளவே தள்ளுபடி அறிவித்திருப் பது மிகவும் கொடுமையானதாகும். 1 லட்சம் கடன் பெற்றவருக்குத் தரும் 5 ஆயிரம் தள்ளுபடி வட்டிக்குக்கூட கட்டி வராது என்பது விவசாயிகளை மிகவும் சிறுமைப்படுத்துவதாகும்.

ஒன்றிய அரசு கடந்த 12 ஆண்டுகளாக விவசாய விளை பொருள்களுக்கு கட்டுபடியான விலை வழங்கவில்லை. அது மட்டுமின்றி நெல்லின் கொள்முதல் ஈரப்பத அளவை 22 சத வீதமாகவும் உயர்த்தவில்லை. விவசாயச் செலவு கள் அதிகரித்துக் கொண்டே இருக்கும் சூழலில் விதை, உரம் உள்ளிட்ட இடுபொருள்களின் விலை உயர்ந்து கொண்டேயிருக்கும் நிலையில் விவசாயி நிரந்தரக் கடனாளியாகவே காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்.

கடன் வாங்கிப் பயிரிட்டவனும் மரமேறிக் கைவிட்டவனும் ஒன்று என்பது பழமொழி. ஊருக்கெல்லாம் சோறு போடும் விவசாயிகளை கூறு போட்டு இப்படி கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்வது அநியாயம். மேற்கு ஆசியப் போர்ப் பதற்றத்தால் உரவிலை உயர்வு, அமெரிக்க ஒப்பந்தத்தால் வேளாண்மையே பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ள சூழலில் அவர்களை தமிழக அரசு மேலும் வேதனைக்குள்ளாக்க வேண்டாம்.

5 ஏக்கருக்கு கீழ் உள்ளவர்களுக்கு முழுமை யான கடன் தள்ளுபடியும் அதற்கு மேல் உள்ள வர்களுக்கு 50 சதவீத தள்ளுபடியும் வழங்கு வதே உழவர்களுக்கு உதவும் செயலாகும். அதை தமிழக அரசு செய்வதே விவசாயி களைப் பெருமைப்படுத்துவதாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கவிஞர் தமிழ்தாசன் தலைமையில்

# கழக தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம்!

## ஆர்,எஸ்,பாரதி – டி,கே,எஸ்,இளங்கோவன் சிறப்புரை! தீர்மானக்குழுச் செயலாளர்கள் அறிவிப்பு!

சென்னை, மே 28-

கழக தீர்மானக் குழு செயலாளர்கள் மீ.அ.வைத்தியலிங்கம், அக்ரி கே.பி.டி. கணேசன். கோவை நா. கார்த்திக் ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

கழக தலைமை தீர்மானக் குழு நிர்வாகிகள் கூட்டம் வரும் 31.5.2026 ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்க வளாகத்தில் தீர்மானக் குழு தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில், தீர்மானக் குழு செயலாளர்கள் மீ.அ. வைத்தியலிங்கம், அக்ரி கே.பி.டி.கணேசன், கோவை நா.கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர்ஆர். எஸ்.பாரதி மற்றும் கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

கூட்டத்தில் மாநில தீர்மானக் குழு நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:

1.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா

2.கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட

# தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, மே 28-

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமையில்,



நாளை (29.5.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1.ஜுன் 3 ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக,

2.கழக ஆக்கப்பணிகள் சம்மந்தமாக.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ராமமூர்த்தி தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கலந்து கொண்டு,வரும் ஜூன் 3ம் தேதி முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர், கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் எனவும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை கழக நிர்வாகிகளுக்கு வழங்கினார். மேலும் இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும், கழகக் கொள்கை பரப்பு துணைச் செயலாளருமான பெருநற்கிள்ளி உட்பட மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்,ஒன்றிய நகர,பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பணிக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

### தி.மு.க. பொறியாளர் அணி

# மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள் காணொலிக் கூட்டம்!

## பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி மாநில தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொள்ளும் காணொலிக் கூட்டம் நடைபெற உள்ளது.

நாள் : 31-05-2026, ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி

பொருள்: 1) முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கொண்டாட்டம் & நலதிட்ட உதவிகள் குறித்து.

2) அணியின் செயல்திட்டங்கள் குறித்து.

இக்கூட்டத்தில் பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**எஸ்.கே.பி.கருணா**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

# பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுக!

## நெல்லை மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் கோரிக்கை மனு!

நெல்லை,மே 28-

நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் ஜுன் 1ஆம் தேதி கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்க கோரி நெல்லை மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமாரிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்ப தாவது.

திருநெல்வேலி,தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைகளையும், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயம் செய்வதற்கு தாமிரபரணி ஆற்று தண்ணீர் பூர்த்திசெய்து வருகிறது.பாபநாசம் அணையில் இருந்து வடக்கு கோடைமேல் அழகியான்,தெற்கு கோடைமேல் அழகியான்,நதியுண்ணி, கன்னடியன்,திருநெல்வேலி மற்றும் பாளையங் கால்வாய் ஆகிய கால்வாய்களில் ஒவ்வொரு வருடமும்,ஜீன் 1ந்தேதி கார் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது வழக்கம்.இந்த கால்வாய்களில் வரும் தண்ணீரால் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஆகிய தாலுகாக்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாயம் நடைபெற்று, பல ஆயிரக்கணக்கான விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது.

மேலும் கடந்த 2021-2025 ஆண்டுகளில் நடைபெற்ற தளபதியார் மு.க.ஸ்டாின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசில், நெல்லை மாவட்ட விவசாய பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று,முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டா லின் அவர்களின் உத்தரவு பிறப்பித்து ,ஒவ்வொரு வருடமும் பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள சுமார் 85,000 ஏக்கர் விவசாய நிலங்களில் விவசாயம் செய்யப்பட்டு, விவசாயிகள் பலன் அடைந்தனர்.

கடந்த 2006-2011 தி.மு.க ஆட்சி காலத்தில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் பாபநாசம் அணையில் சுமார் 30 அடி தண்ணீர் இருந்தபோதிலும் கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.அது போல இந்த வருடம் கார் சாகுபடிக்கு வடக்கு கோடைமேல் அழகியான், தெற்கு கோடை மேல்அழகியான்,நதியுண்ணி, கன்னடியன்,திருநெல்வேலி மற்றும் பாளையம் கால்வாய் ஆகிய கால்வாய்களில் தண்ணீர் வருகின்ற ஜீன் 1ந்தேதி திறப்பதற்கு விவசாய சங்கங்கள், விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆகவே,மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாய பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, மேற்கண்ட கால்வாய்களில் வருகின்ற ஜீன் 1ந் தேதியன்று கார் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதற்கு,உரிய நடவடிக்கை எடுத்து தண்ணீர் திறந்து ,விவசாய பெருங்குடிமக்கள் தங்கள் விவசாய நிலங்களில் விவசாயம் செய்து,அவர்களின் வாழ்வாதாரங்கள் மேம்பட்டு அவர்களது குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைநிறுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளார்.

பின்னர் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

கடந்த 5 ஆண்டு கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகன் மு.க.ஸ்டா லின் அவர்கள் முதலமைச்ச ராக இருந்த போது

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 1ஆம் தேதி பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு அதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் 7 போகம் விளையவில்லை.தி.மு.க. ஆட்சியின் போதுதான் விவசாயத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 1996 இல் நான் எம்எல்ஏவாக இருந்து பாபநாசம் அணையில் 30.40 அடிக்கு தண்ணீர் இருந்த போதும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.எனவே இந்த ஆண்டு கார் பருவ சாகுபடிக்கு தாமதமின்றி ஜுன் 1ல் தண்ணீர் திறக்க வேண்டும்

தமிழ்நாடு முதல்வர் விஜய் விவசாயிகளுக்கு பயிர் கடன் தள்ளுபடி அறிவித்துள்ளார், கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றாமல் ரூபாய் 50,000 ம் வரை மட்டுமே தள்ளுபடி என அறிவித்துள்ளதை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.பயிர் கடன் தள்ளுபடி என்பது கண்துடைப்பாகும்.நெல் கொள்முதல் செய்த பணம் கூட இன்னும் வழங்கப்படவில்லை. தி.மு.க.ஆட்சி தான் எப்போதும் விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று கூறினார்.

அப்போது மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி, வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன், சிறுபான்மை நல உரிமை பிரிவு மாவட்ட தலைவர் இஸ்மாயில், கோபாலசமுத்திரம் பேருச்செயலாளர் வானுமாமலை ஆகியோர் உடன் இருந்தனர்.








கழகத் தலைவர், தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், வி.பூதூர் ஊராட்சியில், மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்த போது அப்பகுதி பா.ம.க. கட்சியைச் சேர்ந்த ஜனார்த்தனன், கோபி, அப்பு , நடராஜ் , சுதாகர், மணிகண்டன், சுந்தர்ராஜ், பாஸ்கர், பரத், கோகுல் ஆகியோர் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.ஜி.பிரபாகரன், கண்ணமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.